**மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் உறுப்பினர்கள்**

- மாவட்ட ஆட்சியர் - தலைவர் (பதவி வழி)
- மாவட்ட வருவாய் அலுவலர் - தலைவர் செயல் அலுவலர் (பதவி வழி)
- மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் - பதவி வழி
- கூடுதல் ஆட்சியர் / திட்ட அலுவலர், மாவட்ட ஊரக மேலாண்மை முகமை
- மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)
- இணை இயக்குநர் (சுகாதாரத்துறை)

மாவட்ட பேரிடர் மேலாண்மை முகமையானது, மாவட்ட அளவில் பேரிடர் தொடர்பான ஆயத்தநிலை ஏற்பாடுகள் குறித்து சூழ்நிலைகளை கையாள வேண்டி பேரிடர் அல்லாத காலங்களில் மேற்கொள்ளப்படும் அனைத்து துறை நடவடிக்கைகளையும் ஆண்டு முழுவதும் அவ்வப்போது ஆய்வு மேற்கொள்ளும். எவ்வகையான பேரிடரின் மேலாண்மை தொடர்பான சூழ்நிலைகளை கண்டறிந்து அவற்றை கையாளும் விதங்களை மேம்படுத்தும் வகையில் மாவட்ட அளவிலான அனைத்து துறைகளின் தலைமை அலுவலர்களுக்கும் உரிய உத்தரவுகள் வழங்கப்படும். தேவைப்படும் பட்சத்தில் பிற மாவட்டங்களிலிருந்தோ, முகமையிலிருந்தோ, உதவிகள் பெறவும், நடவடிக்கைகள் மேற்கொண்டு மேற்கெண்ட அனைத்து நடவடிக்கைகளையும் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கும், மாநில செயலாக்க குழுவிற்கும் தெரியப்படுத்தும்.

மாவட்ட ஆட்சியர் அவர்களின் பங்கும், பொறுப்புகளும் (சென்னை பெருநகர மாநகராட்சியை பொறுத்தமட்டில் அதன் ஆணையர்)

பேரிடர் நிகழ்வின்போது மாநில அரசு சார்ந்த அனைத்து துறைகளும் மற்றும் வாரியங்களும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இதனிமித்தம் சூழ்நிலைகளை கையாள்வதில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலையான பங்கு வருமாறு:-

- மாவட்ட ஆட்சியர் பொறுப்பேற்ற பத்து தினங்களுக்குள் மாவட்ட அளவிலான அனைத்து துறை முக்கிய அலுவலர்களையும் உள்ளடக்கிய முழுஅளவிலான கூட்டத்தை கூட்டி கீழ்க்கண்ட செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.
- மாவட்ட அளவிலான பல்வகை பேரிடர் தாக்கம் குறித்த விபரங்கள் சேகரிக்கப்பட வேண்டும்.
- பேரிடர்களை எதிர்கொள்ளும் பொருட்டு மாவட்ட அளவிலான ஆயத்த ஏற்பாடுகள் ஆய்வு செய்யப்பட வேண்டும்.
- மாவட்ட பேரிடர் மேலாண்மை திட்டம் மேம்படுத்துதல் குறித்து பரிசீலனை செய்ய வேண்டும்.
- மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையத்துடன் கோட்ட, வட்ட, ஒன்றிய அளவில் நேரிடையாகவோ, தொலை தொடர்பு மூலமாகவோ தகவல் பரிமாற்றத்திற்கான சிறந்த திட்டத்தினை உறுதி செய்தல்.
- பேரிடர் மேலாண்மை தொடர்பான பயிற்சிக்கான அட்டவணை தயாரித்து உறுதிசெய்து அதனை நடைபெறுவதற்கான உரிய நிதியை மாநில அரசிடமிருந்து பெறுதல்
- மாவட்ட அவசரகால கட்டுப்பாட்டு மையத்தில் ஒருங்கிணைப்புடன் அனைத்து பேரிடர் மீட்பு

- மாவட்ட அவசரகால கட்டுப்பாட்டு மையத்தில் ஒருங்கிணைப்புடன் அனைத்து பேரிடர் மீட்பு நடவடிக்கைகளும் நடைபெற உறுதி செய்தல்
- அனைத்து தொடர்புடையத்துறைகள் மூலமாக சமுதாய தலைவர்களுடன் தொடர்பு ஏற்படுத்துதல்
- மாவட்டத்திலுள்ள அனைத்து துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுத்துறை / தனியார் துறைகள் ஆகியவற்றில் இருக்கின்ற பேரிடர் மேலாண்மையில் கையாள தேவையான வசதிகளை பெறவும், ஈடுபடுத்த உத்தரவுகள் வழங்குதல்.
- அரசு சாரா அமைப்புகளின் செயல்பாடுகள் சமமாகவும் பாரபட்சமின்றியும் நடைபெறுவதை உறுதிசெய்தல்.
- பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களின் பொறுப்புகளை வரையறுக்கவும் அவர்கள் பணி சூழ்நிலை பாதுகாப்பாக இருக்கவும் உறுதிசெய்தல்.
- பேரிடர் மேலாண்மைக்கு தொடர்புடைய துறைகளை சார்ந்த வல்லுனர்களையும், ஆலோசகர்களையும் வரவழைத்து தேவையான ஆலோசனைகளை பெற ஏற்பாடுகள் செய்தல்.
- பேரிடர் நிகழ்வுகளின் போது அவற்றின் தாக்கம், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், கையிருப்பு மற்றும் தேவையான வசதிகள், நிவாரணப்பொருட்கள் வழங்க தேவையான போக்குவரத்து வசதிகள் போன்றவைப்பற்றிய தகவல்கள் ஒவ்வொரு வாரமும் மாநில வருவாய் நிர்வாக ஆணையருக்கும், மாநில நிர்வாகத்திற்கும் தெரிவிக்கப்படவேண்டும்.

மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் அதனதன் தலைநகரில் மாவட்ட அவசரகட்டுபாட்டு மையம் உள்ளன. மாவட்ட அவசரகால கட்டுபாட்டுமையங்கள் அந்தந்த மாவட்ட மாவட்ட ஆட்சியரின் நேரடி மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகிறது. மாவட்ட அவசர கால கட்டுபாட்டு மையம் பேரிடர் காலங்களில் மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையத்திலிருந்து பெறப்படும் முன்னறிவிப்புகள், எச்சரிக்கைகளுக்கு ஏற்ப தேடுதல், மீட்பு, நிவாரணம் மற்றும் சீரமைப்பு நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் வட்ட, கிராம மட்டத்தில் சென்றடையும் வகையில் தகவல் பரிமாற்றம் செய்கின்ற பணியை மேற்கொள்கிறது. பேரிடர் காலங்களில் பிற தொடர்புடைய துறைகளின் அலுவலர்கள் ஈடுபடுத்தி மாவட்ட அளவில் தேடுதல், மீட்பு நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு தொடர்புடைய தகவல்களை பரிமாற்றம் செய்து அதனை உடனுக்குடன் மாநில வருவாய் ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்களுக்கு தெரிவிக்கிறது. இந்த மையத்தினை பொதுமக்கள் தொடர்புகொள்ள வசதியாக 1077 என்ற எண்ணுடன் கூடிய கட்டமைய்யா தொலைபேசி இணைப்பு உள்ளது. இவற்றை தவிர கூடுதல் அவசரகால கட்டுப்பாட்டு மையங்கள் 13 கடலோர மாவட்டங்களிலும், நீலகிரி மாவட்டத்திலும் கீழ்க்கண்ட வருவாய் கோட்ட அலுவலகத்தில் இயங்கி வருகின்றன.

## அவசர நிலை எதிர்கொள்ளுதல்

- அடிப்படை வசதிகள், உதவி தரும் அமைப்புகள் மற்றும் மனித வள திறன் மேம்பாடு ஆகியவற்றை வழங்குவதன் மூலம் வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் கணிக்கும்

## அவசர நிலை எதிர்கொள்ளுதல்

- அடிப்படை வசதிகள், உதவி தரும் அமைப்புகள் மற்றும் மனித வள திறன் மேம்பாடு ஆகியவற்றை வழங்குவதன் மூலம் வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறையானது மாநிலத்தின் பேரிடர் மேலாண்மை திறனை வலுப்படுத்தி வருகிறது.
- ஆபத்துக்கால இடர்களை எதிர்கொள்ள துறையானது இதர துறைகள், அரசு மற்றும் இடர்களை எதிர்கொள்வதில் நிபுணத்துவம் பெற்ற தனியார் தொழில்நுட்ப மையங்கள் உதவியுடன் சூழ்நிலைகளை எதிர்கொண்டு இடர் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## பேரிடர் எதிர்கொள்ளுதல்

- பேரிடர் எதிர்கொள்ளுதல் 13 நடவடிக்கைகள் என்பது பேரிடரால் ஏற்படும் பாதிப்புகள், உயிரிழப்புகள், உடைமை இழப்புகள் மற்றும் சுற்றுப்புற சூழல் பாதிப்பு ஆகியவற்றை குறைத்தல் மற்றும் பேரிடரால் பாதிக்கப்பட்ட / பாதிக்கக்கூடிய மக்களை மீட்டு எடுத்தல் ஆகியவை அடங்கும். பேரிடர் எதிர்கொள்ளுதல் என்பது பேரிடர் ஏற்பட்ட உடன் தொடங்கி பேரிடர் முடிவுக்கு வந்தது என்று அறிவிப்பு வரும் வரை இது தொடர்பான மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும்.
- பேரிடர் எதிர்கொள்ளுதல் என்பது மிகுந்த பிரச்சனைக்குரிய இடர்களை, குறுகிய கால அவசரசத்திற்குள், கைவசம் உள்ள தகவல் மற்றும் வளங்களை கொண்டு எதிர்கொள்ளுதல் ஆகும். இது பேரிடர் மேலாண்மையின் நான்கு பணிகளில் மிகவும் சிக்கலான பணியாகும்.

- பேரிடர் எதிர்கொள்ளுதல் என்பத உடனடி தேவைகளான தேடுதல் மற்றும் மீட்பு பணிகள், முதலுதவி, புகலிடங்கள் ஆகியவற்றை வழங்குதலோடு மட்டுமில்லாமல் இதர அமைப்புகளையும் ஒருங்கிணைத்து மீட்பு நடவடிக்கைகளை எதிர்கொள்வதை குறிக்கும்.
- சிறப்பான பேரிடர் எதிர்கொள்ளுதலுக்கு தொடர்புடைய அனைத்து துறைகளும் இடர்கள் குறித்த தெளிவான விவரத்தையும், இடர்கால ஏற்படக்கூடிய மின்விளைவுகள், அவற்றினை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை முன்கூட்டியே அறிந்து வைத்து இருப்பதும் ஆகும்.
- மாநிலத்தின் வருவாய்த்துறையே மீட்பு, நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒருங்கிணைப்பு துறையாக செயல்படுகிறது. பேரிடர் ஏற்படும் நேரங்களில் இதர துறைகள் தங்களது முழு ஒத்துழைப்பையும் தரல் வேண்டும். அவசரகால நேரங்களில் மாநில அவசர கட்டுப்பாட்டு அறை, மாநில அளவிலான இதர கட்டுப்பாட்டு அறைகள் முழு வேகத்தில் செயல்படுகின்றன.

அவசர காலங்களில் மேற்கொள்ளப்பட்ட வேண்டிய முதன்மைபணிகள்

- கிராமங்களில் உள்ள தன்னார்வலர்களின் மூலம் தேவை மதிப்பீடு செய்வது.
- பாதிப்பு ஏற்படம் பகுதிகளில் தேவைப்படும் பொருட்களை சமமாக பகிர்ந்தளித்தல்
- புகலிடம் / நிவாரண மையங்கள் உணவு, உடை, போன்ற அடிப்படை வசதிகளுடன், பொது சுகாதாரம் மற்றும் சுத்தமான இருப்பிட வசதிகள் அளித்தது.
- நிவாரண பொருட்கள் வழங்குவதில் வெளிப்படைத்தன்மை கடைப்பிடித்தல்.

## பல்வேறு வகையான பேரிடர் எதிர்கொள்ளுதல் நடவடிக்கைகளில் எந்தெந்த துறைகள் ஈடுபட் வேண்டும் என்ற விவரம் பணிவருமாறு

- கிராமங்களில் உள்ள தன்னார்வலர்களின் மூலம் தேவை மதிப்பீடு செய்வது.
- பாதிப்பு ஏற்படம் பகுதிகளில் தேவைப்படும் பொருட்களை சமமாக பகிர்ந்தளித்தல்
- புகலிடம் / நிவாரண மையங்கள் உணவு, உடை, போன்ற அடிப்படை வசதிகளுடன், பொது சுகாதாரம் மற்றும் சுத்தமான இருப்பிட வசதிகள் அளித்தது.
- நிவாரண பொருட்கள் வழங்குவதில் வெளிப்படைத்தன்மை கடைப்பிடித்தல்.

**பல்வேறு வகையான பேரிடர் எதிர்கொள்ளுதல் நடவடிக்கைகளில் எந்தெந்த துறைகள் ஈடுபட் வேண்டும் என்ற விவரம் பணிவருமாறு பட்டியல்.**